விலை: 1 ரூபா

கட்டணம்
இலங்கை
ஒரு ஆண்டு — 60-00
அரை ஆண்டு 30-00
இந்தியா
ஒரு ஆண்டு 75 00
ஏனைய நாடுகள்
ஒரு ஆண்டு
15 அமெரிக்க டொலர்

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
1980-12-1
PERIODICALS DIVISION
LIBRARY

# உதயசூரியன்
UTHAYASURIYAN
தமிழர் விடுதலைக் கூட்டணி வார இதழ்

கதிர் 1, திருவள்ளுவராண்டு 2011, 21—11—80, வெள்ளிக்கிழமை, ஒளி—8

# யூ. என். பி. இரண்டாக உடையும்!

## கடுவெல எம்.பி.யின் காரசாரமான பேச்சின் விளைவு!

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டாவது மக்கள் வாழ்வதற்கு வேண்டிய உணவுப் பண்டங்களின் விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாது திண்டாடும் யூ.என்.பி. அரசாங்கத்திற்குள் தற்போது பெரும் உட்கட்சிப் போராட்டமே நடை பெறுவதாகத் தெரிகின்றது.

ஏற்கெனவே— ஜே.ஆர். அணி—பிரேமதாசா அணி என இரண்டாகப் பிரிந்திருக்கும் யூ. என். பிக்குள், தற்போது எம்.டி.எச் ஜயவர்த்தனவின் அணி ஒன்றும் தலை தூக்கியிருக்கின்றதாம் இதற்கு ஆதாரமாக அண்மையில் பாராளுமன்ற வரவு செலவு திட்ட விவாதத்தின் போது திரு எம்.டி.எச். ஜயவர்த்தன ஆற்றிய உரை சுட்டிக் காட்டப்படுகின்றது.

யூ.என்.பியின் பழம் பெரும் பிரமுகர்களில் திரு. எம்.டி. எச். ஜயவர்த்தனவும் ஒருவர் இவர்—நிதி அமைச்சர் திரு. ரொனி டிமெல் அவர்களின் மூன்றாவது வரவு செலவுத் திட்டத்தில் காணப்பட்ட குறைகளை கடந்த ஆண்டு பாராளுமன்றத்தில் கண்டித்துப்பேசிய மறுநாளே பெருந் தோட்டத் தொழில் துறை அமைச்சர் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஆனாலும் அவர் சளைக்கவில்லை என்பதை அவரது அண்மைய வரவு செலவுத்திட்ட விமர்சன உரையும் நாட்டுக்குத் தெளிவாக காட்டிவிட்டது.

நிதி அமைச்சரின் வரவு செலவுத் திட்டத்தை விமர்சனம் செய்ததினால் அவர் தமது கட்சியின் ஒருபகுதியினரால் நடத்தப்பட்டவிதம் பற்றியும் மிகவும் உருக்கமாக வேதனையோடு பாராளுமன்றத்தில் எடுத்துரைத்திருந்தார். இதனால் ஆத்திரப்பட்ட அமைச்சர்கள் சிலர் திரு. எம்.டி எச். ஜயவர்த்தனமீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஜனாதிபதியை வற்புறுத்தியுள்ளனராம்.

திரு. எம் டி.எச். ஜயவர்த்தனமீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில்யூ என். பி இரண்டாக உடையுமென்றஞ்சுவதால்ஜனாதிபதிஜே ஆர். மௌனமாக இருந்து வருகின்றார் என்று நம்பப்படுகின்றது.

நிலைமை எப்படியிருந்தபோதும்யூ என்.பிக்குள்ளும அதன் அரசாங்கத்திற்குள்ளும் தற்போது ஏற்பட்டுள்ள பெரும் குமுறல் விரைவில் வெடித்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என அரசியல் அவதானிகள்கருதுகின்றனர்.

# அநியாய ஆட்சியை எதிர்த்து



ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில்— நாட்டில் உள்ள ஏழை— எளிய— பாட்டாளிமக்களெல்லாம் நடுத்தெரு நாராயணன்களாக ஆக்கப்படும் கொடிய நிலை ஏற்பட்டுவருகின்றது. விலைவாசி உயர்வைத் தாங்கமுடியாது அவர்கள்விடும் வேதனைப் பெருமூச்சு கேட்டு உலகநாடுகளெல்லாம் நம்மைப்பார்த்துச் சிரிக்கின்றன. ஊழலும் லஞ்சமும் தலைவிரித்தாடுகின்றது.


முதலாளித்துவப்பொருளாதார அமைப்பில் நம்பிக்கை கொண்டுள்ள இன்றைய யூ.என்.பி ஆட்சி தனியார் துறையைப் பெரிதும் ஊக்கப்படுத்துவதும்— ஊதியம் போதாத காரணத்தால் வேலை நிறுத்தம் செய்து சம்பள உயர்வு கேட்ட தொழிலாளர் வர்க்கத்தை இராணுவம், பொலிஸ் கொண்டு அடக்கி இம்சைப்படுத்தியதும் இந்த ஆட்சியின் அண்மைக்காலச் சாதனைகள்!

இந்தச் சரித்திர சாதனைகளைச் செய்தது போதாதென்று சிறீலங்காவையும் தமிழ் ஈழத்தையும் ஐக்கிய தேசியக்கட்சியே நிரந்தரமாக ஆள வேண்டுமென்ற நோக்கத்தோடு ஆட்சியினர் செயல்பட்டுவருவதாகத்தெரிகின்றது இதன் ஒரு கட்டமே—அரசியல் எதிரிகளின் குடியியல் அபகரிப்பு என்று நாம் நம்ப வேண்டியுள்ளது

இன்னும் வரலாற்றுக்காலம் தொடக்கம் தமக்கென ஒரு நாடுவைத்து ஆண்ட தமிழினத்தை அடக்கி ஒடுக்கி ஆள்வதிலேஇன்றைய அரசு கண்ணாகஇருக்கிறது இதன் காரணமாகவேதமிழர் பிரதேசம் மெல்ல மெல்லப் பறிக்கப்படுகின்றது.

இப்படி—அடுக்கடுக்காக யூ, என்.பி அரசால் செய்து வரப்படும் கொடுமைகளையெல்லாம்மக்களிடம் எடுத்துச் சொல்லி நியாயம் தேடும் முகமாகவே சிறிலங்காவிலும் தமிழீழத்திலும் செல்வாக்குமிக்க ஐம்பெருங்கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி. மக்கள்ஐக்கிய முன்னணி இலங்கைகம்யூனிஸ்ட்கட்சி தமிழ் இளைஞர் பேரவை ஆகியவை இணைந்து மாபெரும்கூட்டமொன்றை யாழ்—திறந்த வெளியரங்கில் எதிர்வரும் சனிக்கிழமை 22-11-80ல் நடாத்த விருப்பதாக மேறபடி ஐந்து அரசியற் கட்சிகளின் கூட்டமைப்பாளர்களில் ஒருவர் உதய சூரியனுக்குத் தெரிவித்தார்

(8-ஆம் பக்கம் பார்க்க)



# ஐம்பெரும் கட்சி அணி

## தமிழ் ஈழம் தமிழர் தாகம்

## அமைச்சர் தேவநாயகம் தமிழைப் புறக்கணிக்கின்றரா?

அமைச்சர் தேவநாயகம்தலைமையில் 13-11-80ல் இலங்கை மத்தியில் நடைபெற்ற அரசாங்க அதிபர்கள் மாநாட்டில் தமிழுக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை,

மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சர்கள் அதிகாரிகளின் ஆசனங்களில் பெயர் விபரங்கள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே எழுதப்பட்டிருந்தன. தமிழ் புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

இவ் வருட முற்பகுதியில் தேவநாயகம் தலைமையில் டைபெற்ற அரசாங்க அதிபர்கள் மாநாட்டிலும் தமிழ் புறக்கணிக்கப்பட்டிருந்த தும் குறிப்பிடத்தக்கது.

# பறவைகளே! பறவைகளே!

பறவைகளே! பறவைகளே!

கண்ணீர் சிந்துகிற மனிதனுக்குப் பக்கத்திலேயே இந்தக் கவிஞனின் வாழ்க்கை இருக்கிறது.

அடிமை எங்கிருந்தாலும் அவனுக்கே இவன் அடிமை ஆவான்.

தமிழனுக்கு சுதந்திரம் வந்துவிட்டபிறகுகூட இவன் சுதந்திர புருஷனாக வாழமாட்டான்—உலகில் சுதந்திரத்துக்காகப் போராடும் ஏனைய அடிமைகளோடு ஓர் அடிமையாகவே தன்னை இவன் வைத்திருப்பான்.

உலகம் முழுவதும் வி தலைவெளிச்சத்தில் உட்கார வேண்டும்

பாஷ்க் இனத்தவன் ஸ்பானிஷ்காரனால் நசுக்கப்படுகிறனா?—நான் பாஸ்க்காரன் பக்கம்—கறுப்பன்வெள்ளைக்காரனால் கழுத்துநெரிக்கப்படுகிறனா?—நான் கறுப்பன் பக்கம். தொழிலாளி முதலாளியால் துன்புறுத்தப்படுகிறனா?—நான் தொழிலாளி பக்கம். தாழ்த்தப்பட்டவன் உயர் ஜாதிக்காரனால் தாழ்த்தப்படுகிறனா?— நான் தாழ்த்தப்பட்டவன் பக்கம்.

பறவைகளே! பறவைகளே!

அடிமைகள் போராட்டம் ஐந்தாறவகை ஆனாலும்—ஒரு தேசிய இனத்தின் போராட்டம் அனைத்திலும் முக்கியமானது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

போராட்டம் முடிய எத்தனை காலம் போகுமோ— அதுவரை—கறுப்பன் கறுப்பனாகவே இருப்பான்— தொழிலாளி தொழிலாளியாகவே இருப்பான் – தாழ்த்தப்பட்டவன் தாழ்த்தப்பட்டவனாகவே இருப்பான்— அவர்கள் அழிவதில்லை— ஆனால் தேசிய இனம் அந்த இடைக்காலத்தில் அழிந்தோ திரிந்ததோ போகக் கூடிய ஒன்றாகும்.

ஒரு தேசிய இனம்—இன்னொரு தேசிய இனத்தின்மொழி கலாச்சார திணிப்புக்களால்—நில ஆக்கிரமிப்பால் உருச்சிதைந்து போகும் ஆபத்து என்றைக்கும் உண்டு.

மலையாள இனமாய் இப்படித்தான் தமிழ் இனம்மாறிப் போயிற்று—தெலுங்கு இனமாய் இப்படித்தான் தாழ் இனம் திரிந்து போயிற்று.

பறவைகளே! பறவைகளே!

வர்க்கப் போராட்டத்தைவிடத் தே சிய இனப்போராட்டத்தை நாம் முதலில் வைப்பதற்கு இதுவே காரணமாகும்.

தொழிலாளவர்க்கம் அழியக்கூடியதல்ல—தேசிய இனம் அழியக்கூடியது.

அழியக்கூடிய ஒன்றை முதலில் காப்பாற்றுகிறவனையே அறிவாளி என்போம்!

நீந்தத் தெரிந்த ஜீவனைப் பின்பு காப்பாற்றலாம்—நீரில் விழுந்து கையை காலை அடிக்கிற குழந்தையை நீ முதலில் காப்பாற்று,

இன்னும் ஓர் உண்மை இயம்புவேன்— முதலாளித்துவத்தின் கொட்டத்தைவிட இங்கே சிங்கள ஏகாதிபத்தியத்தின் கொடுமையே பெரிதாய் இருக்கிறது.

மலையகத்தில் வாழும் பத்துலட்சம் தொழிலாளர்கள் வர்க்க அடிப்படையில் அல்ல—தமிழர் என்பதாலேயேகுடியுரிமைஇழந்துமனிதர் இல்லாமரங்கள் ஆனார்கள்,

சிங்கள மக்கள் மத்தியில் சோசலிசம் பேசுகிறவன் கூட சிங்கள வெறியின் மத்தியில் நின்றேசோசலிசம் பேசுகிறன்.

'தமிழனைக் கடலில் தள்ளு'? என்றுசொன்னபிலிப் குணவர்த்தனவையும் பார்த்தோம்— இருபத்து நான்கு மணி நேரத்தில் சிங்களத்தை அரசகருமமொழி ஆக்கியபண்டாரநாயக்காவையும் பார்த்தோம்—தமிழ் மொழி சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தை எதிர்த்து மாண்ட புத்தபிக்கு ஒருவனின் சிலைக்கு பூவைத்த கெனமனையும் பார்த்தோம்— தமிழனை அடிமைப்படுத்தும் குடியரசுஅரசியல் அமைப்பையாத்த கால்வினையும் பார்த்தோம்—தமிழன் சண் எ க்கு தலைமை தாங்குவதா என்று பீக்கிங் கம்யூனிஸ்ட்கட்சியை விட்டு வெளியேறிய ரோகணவிஜய வீராவையும் பார்த்தோம்.

இவர்களெல்லாம் சிங்கள இனவெறியில் சோசலிசம் இசைத்தவர்களே!

பறவைகளே! பறவைகளே!

தமிழ் ஈழ விடுதலை—இதனால்தான் முதலில் நாங்கள் தலையில் வைத்துச் சுமக்கிறோம்,

இனவிடுதலைக்கு முன்னால் மார்க்சியத்தைஇங்கே சிலர் இழுத்து வைக்கிறார்கள்,

மார்க்ஸின் சோசலிச தத்துவத்தை நாங்கள் மனமார ஒப்புகிறோம்,

அந்த ஒளி ஒன்றே உலகில் அமைதிக்கு பரிபூரண வழி என்று கருதுகிறவன் நான்.

மார்க்ஸின் சோசலிசம் தமிழனுக்கு புதிய மார்க்கமும் அல்ல...

''பகுத்துண்டு பல்லுயிரோம்பிவாழ்தல் நூலோர்தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''

இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வள்ளுவனார் எழுதியது—

நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை என்று அவர் பாடியதால் வள்ளுவருக்கு பல்லாயிரம் ஆண்களுக்கு முன்பே கார்ல்மார்ஸ் தமிழனாய்ப் பிறந்திருக்கிறன்.

பறவைகளே! பறவைகளே!

முதலாளித்துவ அற்றஒரு "முதாயத்தைமுதலில்படைப்போம்—அதை வைத்தே தமிழ்ஈழத்தின் அடிமை டைப்போம் என்றுஒரு புது முழக்கமும் இப்போது கேட்கிறது.

பாரிய முதலாளித்துவ தாக்கம் அற்றிருக்கும் ஒரு சூழலில்—இனவெறிஏகாதிபத்தியம் தலைவிரித்தாடும் ஒரு சூழலில் — வர்க்கப்பிரச்சினை எடுபடாது என்பதை மார்க்சும் லெனினும் உணர்ந்திருந்தார்கள் — சீரிய மார்க்ஸின் தொண்டர்கள் எனத் தம்மைச் சால்லிக்கொள்வோர் இங்கே அதைச் சிந்தித்துப் பார்க்க மறுக்கிறார்கள்.

அயர்லாந்து மக்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இன விடுதலைப்போரை நடத்தியபோது... அயர்லாந்தில் இருந்த கம்யூனிஸ்டுகள் லண்டனில் இருந்த மார்க்சுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள்,

இங்கே நிகழ்வது ஒரு வர்க்கப் போரல்ல— இது இனப் போர்—இதில் எங்கள் நிலை என்ன என்று மார்க்சிடம் அவர்கள் கேட்டார்கள்.

மார்க்ஸ் எழுதினர்;—

''தோழர்களே! அடிமைத்தனம் எந்த வடிவில் இருந்தாலும் அது எதிர்க்கப்பட வேண்டியதே!

அயர்லாந்து மக்களுக்கு முழு ஒத்துழைப்பையும்அளியுங்கள். ''

இன்னும் ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது.

பாரத சுதந்திரப் போராட்டநாளில்— எம்,என்- ராய் மாஸ்கோவில் லெனினைச் சந்தித்து 'காந்தி அடிகள் பச்சைத் துரோகம் செய்கிறர்— மன்னர்களோடும்— முதலாளித்துவ கும்பலோடும் சேர்ந்து வெள்ளையனை எதிர்ப்பது மாபெரும் வேடிக்கையாகாதா?' என்று கேட்டார்.

லெனின் சொன்னர்:—

''மகாத்மா காந்தி செய்வது முற்றிலும் சரியே!

இந்தியாவின் விடுதலையே உங்கள் முதல் இலட்சியமாய் இப்போதைக்கு இருக்க வேண்டும்.

தேசிய முதலாளித்துவ சக்திகளோடு காந்தி அடிகள் இந்தக்கட்டத்தில் சேர்ந்து நிற்பது நியாயமானதே!''

பறவைகளே! பறவைகளே!

இதனால்தான் தேசிய இனவிடுதலைப் போருக்கு முன்னால் வர்க்கப் போரை இழுக்காதீர்கள் என்கிறேன்.

கூந்தல் முடிவிலே தொங்க வேண்டிய குஞ்சத்தை மூக்கின் முனையிலே முடியாதீர்கள்.

தமிழ் ஈழத்தில் போராட்ட சக்திகள் அனைத்தும் ஒரே இயக்கமாய் தலை நிமிர்வோம்!

உங்களை நான் முதலாளித்துவ கும்பலுக்குமுண்டுகொடுங்கள் என்று சொல்லவில்லை—பத்து நூறாய் நின்று ஒரு விடுதலை இயக்கத்தில் முரண்டு பண்ணாதீர்கள் என்கிறேன்.

உலகில் நாம் என்றைக்கும் சோசலிச சக்திகளின் பக்கமே!

சிங்கள இனவெறி மிக்க சோசலிச சிவப்புச் சட்டைகள் சிலவற்றின் சேட்டைகளால் உலகசோசலிச சக்திகளின் மீதுள்ள பாசத்தை நாம் சிறிதும் குறைத்துக் கொள்ளமாட்டோம்.

இன்னும் சொன்னால் நமது இதயங்கள் இன்னும் புனிதமானவை.

சிங்களத்தொழிலாளர்கள முதலாளித்துவ யு.என்.பி அரசால்துன்புறுத்தப்படும்போது அவர்களுக்காகவும் குரல்கொடுக்கும் சிறந்த பண்பை நாம் பெற்றிருக்கிறோம்.

பறவைகளே! பறவைகளே!

விஞ்ஞான சோசலிசத்தின் அத்திவாரத்திலேயே தமிழ் ஈழ அரசு அமையம் என்பது நமது விடுதலை இயக்கத்தின் கொள்கை,

இதுபோதும்,

புரட்சி வீரர்களே! எங்களைப் புரிந்து கொள்ளுங்கள்!

மார்க்சிசம் பேசி கூட்டணியைஉடைக்க நினைக்கிறவன்-உடைந்தகூட்டணியின் துண்டுகளைக் கொண்டு மார்க்சிசத்துக்கு கல்லறை கட்டுகிறவனே!

அநியாயம் செய்யாதீர்கள்.

பறவைகளே ! பறவைகளே!

விடுதலைக்காகவே நமது இறக்கைகள் விரிந்தன.

சிந்தாந்த பேதம் - தீவிர வாதம் - இவை இன்று ள சிலர் பாடும் புதியகீதம் ஆனால் இவை அனைத்தின் நடுவிலும் விடுதலை என்றே நம் வேதம்!

வாருங்கள் பறப்போம்.

கவிஞர் காசி ஆனந்தன்




# மண்ணைக் காக்க ஒரு மார்க்கம்

தமிழ் இனம் உலகிலேயே பழம்பெரும் இனங்களில் ஒன்று. ஐயாயிரம் ஆண்டுகட்குமேற்பட்ட தொடர்பான வளர்ச்சிபெற்ற ஓர் நாகரீகத்தின் சொந்தக்காரன் தமிழன்.

கிரேக்கம். லத்தீன், எபிரேயம் சமஸ்கிருதம் ஆகிய உயர்தனிச் செம்மொழிகளோடு ஒரே காலத்தில் தவழ்ந்து வளர்ந்த மொழி தமிழ். அந்த மொழிகள் நாலும் மூப்படைந்த இறந்தொழியத்தான் மாத்திரம் இளமை குன்றாது இன்றும் வாழ்ந்து வளர்ந்து வரும் மொழிதமிழ்.

உலகின் பலநாடுகளிலும் பரந்து ஆறுகோடிக்கு மேற்பட்ட தமிழர் வாழ்கின்றனர்கள் அதே எண்ணிக்கையுள்ள அராபிய மக்கள் இருபதுக்கு மேற்பட்ட சுதந்திர நாடுகளாக உலக அரங்கில் பவனி வருகின்றனர். ஆறுகோடி தமிழ் மக்களுக்கும் சொந்தமான சுதந்திர நாடு ஒன்று தானும் இல்லை. நாலரைக்கோடி தமிழ் மக்கள் வாழும் தென்னகம் மதராஸ் மாநிலமாக இருந்தது. பேரறிஞர் அண்ணாவின் சாதனை இந்தியப் பேரரசின் அங் மாகவாவது தமிழ் நாடு என்ற நிலப்பரப்பு உலகப் படத்தில் இடம் பெறச்செய்ததாகும்.

தமிழ் நாட்டுக்கு அடுத்து முப்பத்தைந்து லட்சம் தமிழ் பேசும் மக்களைக் கொண்டதாக இலங்கைத் தீவு விளங்குகின்றது. இத்தீவின்வட கீழ்ப்பாகம் தமிழ் மக்களின்தாயகமாகத் தொன்றுதொட்டு விளங்கிவந்த போதிலும் நானூறு வருட அந்நிய ஆட்சியில் எல்லைகள் மறைந்து எல்லைப்பிரதேசத்தில் படிப்படியாகச் சிங்கள மக்கள் பரவிவாழும் நிலை ஏற்பட்டு விட்டது தமிழ்மக்களும் அந்நிய ஆட்சியில் தம் பாரம்பரியப் பொருளாதாரம் நலிவடையதென்னிலங்கையில்வாழ்வு தேடிச் சென்று வசிப்பவராகிவிட்டனர்.

ஆங்கில ஆட்சியில் தீவு முழுவதும் பரந்து வர்த்தகம் கைத்தொழில் அரசசேவை ஆகிய துறைகளில் தம் வாழ்வை அமைத்துக் கொண்டனர். ஆங்கிலேயர் தமிழ் நாட்டிலிருந்துகொண்டு வந்த தமிழ் தொழிலாளரின் வழித்தோன்றல்களாகிய மலைநாட்டுத் தமிழ் மக்கள் பத்து லட்சத்துக்கு மேற்பட்டோர் மத்திய இலங்கையின் தேயிலை ரப்பர் தோட்டங்களிலும் அங்கிருந்து வழிந்து சிங்கள நாட்டின்பல பட்டினங்களிலும் கிராமங்களிலும்வ ழத் தொடங்கினர்.

இலங்கை சுதந்திரம் பெற்றபின் மாறிமாறி வந்தசிங்கள அரசுகள் தமிழ் இனத்தின் உரிமைகளைப் பறிப்பதில் ஒன்றோடொன்று போட்டியிட்டுச் செயற்பட்டன 1956ம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டத்தைத் தொடர்ந்து தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்கள் காலத்துக்குக்காலம் தாக்குதலுக்கும் கொள்ளையடித்தலுக்கும்ஆளாக்கப்பட்டனர். பெருமளவில் பரவலாக இந்தத் தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கை 1958லும் 1977லும் நடந்தாலும் சிறு அளவில் தென்னிலங்கையில் ஏதாவது ஒரு பகுதியில் இப்படிச் சம்பவங்கள் நடைபெறாத ஆண்டே இல்லை என்று கூறலாம் இவற்றினால் பாதிப்புற்ற மக்கள் பெருங் கலவரத்தின்போது பெரும் எண்ணிக்கையிலும் ஏனையகாலங்களில் சிறு சிறு எண்ணிக்கைகளிலும் தமிழ் ஈழத்திற்குவரத் தொடங்கினர்.

இப்படி வந்த மக்களுக்குத வாழ்வளிக்கக்கூடிய நிலையில் தமிழ் ஈழம் இருக்கவில்லை. அந்நியர் கட்சியிலும் முப்பத்திரண்டு வருடச் சிங்கள ஆட்சியிலும் பொருளாதார வளர்ச்சி குன்றிய பகுதிகளாயிருந்த வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழ வழியற்ற நிலையில் வந்த தமிழ்க் குடும்பங்கள் பல மீண்டும் தென்னிலங்கை சென்றன, தேனீக்கள் போலச் செல்வத்தைச் சேர்க்க மீண்டும் கொள்ளையடித்துத் துரத்தப்பட்டுத் தமிழ் ஈழம் வந்தனர். நிலைமை திருந்தியவுடன்மீண்டும்சென்றனர். இந்நிலைக்கானகாரணத்தைஇலட்சிய இதயங்கள் சிந்திக்கவேண்டாமா? காலத்துக்குக் காலம் வரும் தமிழ் மக்கள்மாத்திரமல்ல, இங்கிருந்து வாழ்வுதேடி வெளியேறும் தமிழ் மக்கள் மாத்திரமல்ல, தமிழ் ஈழம் அமையும் போது தென்னிலங்கையில் வாழும் தமிழ் மக்கள் அத்தனைபேருக்குமே தமிழ் ஈழத்தில் நாம் வாழ்வளிக்க வேண்டாமா?

சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றிய சட்டத்தினால் எமது மாவட்டங்களின்எல்லைகள்உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

வவுனியா மாவட்டத்தின் எல்லையையும் தன்மையையும் மாற்றிச் சிங்களப்பெரும்பான்மை மாவட்டமாக்கி வடமத்தியமாகாணத்தின் பகுதியையும் சேர்க்கும் ஆபத்து சட்டரீதியாகவே நீக்கப்பட்டுவிட்டது. திருமலைமாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் பழமை வாய்ந்த கிராமங்களான தென்னமரவடி, புல்மோட்டை ஆகியவை அனுராதபுரம் மாவட்டத்தோடு 1973ம் ஆண்டே இணைக்கப்பட்டிருந்தன அந்த இணைப்புத்துண்டிக்கப்பட்டுஇந்த இருகிராமங்களும் திருகோணமலைமாவட்டத்தின் பகுதிகளே என்பது புதியசட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது எமது மாவட்டங்களுக்கு ஓரளவு தெளிவான எல்லைகள் வகுக்கும் சட்டத்தை நாம் ஏற்றது தவறென்று சிந்திக்கும் திறம் படைத்த மக்கள் கூறுகிறார்கள்.

இந்த மாவட்டங்களுக்கு இது காலும் இருந்ததுஆட்சியின் பிரதிநிதியான அரசாங்க அதிபரின் நிர்வாகமே அந்நிய ஏகாதிபத்திய காலந்தொடக்கம் இருந்துவந்த இந்தமுறையேமுப்பத்திரண்டுவருடச் சிங்கள ஆட்சியிலும் இருந்து வருகிறது. அரசாங்க அதிபரின் இடத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவரும், பாராளுமன்ற உறுப்பினரும், அபிவிருத்திச்சபை உறுப்பினரும் கொண்ட ஒரு மன்றம் அமர்ந்து தமது மாவட்டத்தை பொருளாதாரத்தை வளர்ப்பதற்கான திட்டங்களைத்தீட்டி, நிதியைத் தேடி, நடைமுறைப்படுத்த வாய்ப்புஏற்படுமானால் நாம் அதைப்பயன்படுத்துவதில் என்ன தப்பு என்பதை இலட்சிய இதயங்கள் எண்ண வேண்டாமா?

இந்த அமைப்பில் பலகட்டுப்பாடுகள்உண்டு- இது சுதந்திரமோ-சுயாட்சியோ அல்ல, ஆனால்எல்லைகளை உறுதிப்படுத்தி அதற்கென்று ஒரு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அமைப்பு ஏற்படுமானால் அது எவ்வளவு குறைந்த அதிகாரத்தை கொண்டதாயிருந்தாலும் எமது நிலையில்ஒருசிறிது முன்னேற்றம் உண்டு என்பதை யாராவது மறுக்க முடியுமா? மாவட்ட அமைச்சரின் அதிகாரம்உண்டு. சனாதிபதியின் ஆணையுண்டு. மந்திரியின் தலையீடு உண்டு. இன்றுஇத்தனையும் மொத்தமாக உண்டு எப்போதும் உண்டு நேரடியாக உண்டு. அபிவிருத்திச்சபை வந்தால் சில சந்தர்ப்பங்களில்தான் உண்டு. இப்பொழுது அவர்களால் வகுக்கும் திட்டங்கள் என்ன என்பதை அவற்றைச்செயற்படுத்தும்போதுதான் அறிகிறோம். நாமாகத் தயாரிக்கும் திட்டத்தில் அவர்கள் தலையிட்டாலும் எமக்குத் தெரியாத வகையில் எதையும்செய்யும் நிலை இருக்கும் இது எமக்குப பாதுகாப்புதானே எல்லாநேரத்திலுல் அவர்கள் தலையிட்டால் அவர்களின்ஏமாற்றைஉலகுக்கு எடுத்துக் கூறிஇந்தஅற்ப விடயத்தில் தானும் சுயமாக இயங்க விடாத எதேச்சாதிகாரத்தை எதிர்த்துக் குரல் கொடுக்கலாம்தானே இதனால் எமதுவிடுதலைக்குரல்மேலும் பலம் பெறுமேயன்றி எந்த வகையிலும் பலவீனப்படமாட்டாது.

தமிழ் ஈழத்திற்கு வருகின்ற தமிழ் மக்களுக்கு வாழ்வளிக்க—சிறு கைத்தொழில்களை ஆரம்பித்து வேலை வழங்க —மத்திய தரத் தொழில்களினால் வளம் பெருக்க—மீன்பிடித்துறையில் மாற்றாருக்கு இன்று வசதி வழங்கப்படுவது போலன்றி எமது மக்களுக்கே வசதிகள் வழங்க—வீடமைப்புத்திட்டங்களில் எமது மக்களை வாழவைக்க—நிலம், நீர்ப்பாசனம், விவசாயசேவை, கூட்டுறவு போன்ற பலதுறைகளையும் பயன்படுத்தி நம் நாட்டை வளப்படுத்தினால் எமது மக்கள் இங்கேயே, குடிப்பெயர் அறியாப் பழங்குடி, என்று பண்டைத்தமிழ் மக்கள் வாழ்ந்தது போலவாழ முடியும் இவற்றை நாம் செய்யும் போது ஆட்கியாளர் தலையீடு ஏற்பட்டால்போராட்டம்வெடிக்கும் விடுதலைப் பயணம் துரிதப் படுத்தப்படும்.

ஏனைய நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் உள்ளங்களில் ஓரே ஆவல் உலகில் தமிழனுக்கு ஒரு நாடாவது உதிக்க வேண்டும் என்பதே அதன் பொருட்டு தமிழ் ஈழ விடுதலைப் போருக்கு ஆதரவாகப்பல நாடுகளில்பல இயக்கங்கள்வளர்ந்துவருகின்றன. இந்நிலையைப்பயன்படுத்திப்பலர் தம்மை வளர்த்துக் கொள்ள முயன்று நிற்கின்றனர். இரண்டு வருடங்களுக்கு முன் இந்தியவிடுதலைப்போரில் கிருஷ்ணமேனன், ஜே.ஜே.சிங்போன்றோர் தலைமையில் பிரித்தானியாவிலும் அமெரிக்காவிலும்வாழ்ந்தஇந்தியர் ஆற்றிய பணியைக் குறிப்பிட்டேன் ஐரிஷ்விடுதலைப்போரில்அமெரிக்காவில் குடியேறி வாழ்ந்தஐரிஷ்மக்கள் வகித்தபங்குமகத்தானது.

ஈழத்தமிழரின் விடுதலைப் போருக்குத்தமிழ் நாடு தன்முழு அனுதாபத்தையும் வழங்கும் என்பது நாம் நன்கு உணர்ந்ததே. 1957ல் இலங்கையில் தமிழர்தாக்கப்பட்டபோதுபேரறிஞர் அண்ணா தலைமையில் மாபெரும் கண்டன ஊர்வலம் சென்னையில் நடைபெற்றது. அரசியல் ஞானி இராசகோபாலச்சாரியார் இணைப்பாட்சிஅமைத்து ஈழத் தமிழருக்கு உரிமை வழங்குமாறு எழுதினார். 1977ம் ஆண்டு தமிழர் படுகொலை செய்யப்பட்டபோது தமிழ் நாட்டுச்சட்டமன்றம்ஆளும்அண்ணா தி.மு.க.வின் வழிநடத்தலில் ஈழத்தமிழருக்கு ஆதரவுதெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றியது தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். தமது அரசின் அனுதாபத்தை வெளிப்படையாகக் காட்டினார். எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களதுதலைமையில் ஐந்து லட்சம் தி-மு.க தொண்டர்கள் அணிதிரண்டு சென்னை நகரில் கடையடைப்பு ஹர்த்தால் நடத்தினர், லண்டன் வாழ் தமிழர் தம் ஆதரவை ஆர்ப்பாட்டங்கள் மூலம் வெளிப்படுத்தினர்,

இன்று சில இயக்கங்கள் தமிழீழத்திலுள்ள நிலையை உணராது தாம் விடுதலைப்போரை எங்கோ இருந்து நடத்தலாம் என்று காட்டித் தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பிளவுபடுத்த முயற்சிக்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் அப்பழுக்கற்ற இயக்கத் தொண்டரான டாக்டர். சிறினிவாசன் சமீபத்தில் வெளியிட்ட கருத்து இலட்சிய இதயங்களுக்கு ஆறுதல் அளிக்குமென்று நம்புகிறேன். லண்டன் தமிழர்ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினரான அவர்கூறுவதுபோல இந்த நேரத்தில் அபிவிருத்திச்சபையை சாட்டாகவைத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கண்டிக்க முனைவது ஈழத்தமிழ் இனத்திற்குச் செய்யப்படும் பெருந்துரோகமாகும்.

## அண்ணன் அமரர்

**தமிழீழத் தமிழரின் இறைமையை தரணிக்கெல்லாம் எடுத்துச்சொன்ன**
**தலைவன் அமரர் மு. திருச்செல்வம் அவர்களுக்கு**
**எங்களின் இதயபூர்வமான அஞ்சலி!**



# ஆபத்தை அழைக்கும் அரசாங்கம்!

நாடாள வந்த சிறிலங்கா அரசாங்கத்தின் நான்காவது வரவு செலவுத் திட்டம் வெளிவந்ததும்—

எதற்கிந்த அரசாங்கம்? என்ற கேள்வியே எல்லோர் மனத்திலும் விஸ்வரூபம் எடுத்து நிற்கின்றது.

எட்டு ரூத்தல் உணவு தருவோம் என வாய் இனிக்கச் சொன்னவர்கள்—

வயிற்றைக் குமட்டிவாந்தி எடுக்கச் செய்யும் வரவு செலவுத் திட்டங்களையே குஞ்சுபொரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பயணம் செய்யும் ஏழை— எளிய நடுத்தர மக்களுக்குப் பச்சை விளக்குக்காட்ட வேண்டியோர்— சிவப்பு விளக்கு காட்டியல்லவா பயமுறுத்துகின்றார்கள்!

பாலின் விலையைத் தானும் உயர்த்தி பச்சிளங் குழந்தைகளின் வயிறறெரிச்சலை வாங்கிக் கட்டிக் கொண்டார்களே— இவர்களென்ன பதவிப் பிசாசுகளா?

நாளையத் தலைவர்களான நாட்டின் குழந்தைகள்— இவர்களையெல்லாம் ஒரேயடியாகத் தலை முழுகும் ஒரு காலம்— அதோ ஓடி வருகிறது!

நெல்லின் விலையை உயர்த்தி விட்டதாம் இந்த அரசு— நிதி அமைச்சர் சொல்கிறார்—

இவரைக் கேட்கிறோம்— இதனால் அரிசி விலை உயருமென உங்கள் பொன்னான பொளாதார மூளை கணக்குப் போடவில்லையா?

பணக்கார வர்க்கத்தை மடியில் போட்டு தாலாட்டுப் பாடும் யு என் பி ஆட்சியினரே!

ஊர்கள் தோறும் உணவுற்பத்தியைப் பெருக்காமல் உல்லாச வாசிகளுக்குகந்த பொருட்களை இறக்குமதி செய்து குவிக்கும் நீங்கள்— இதோடு எத்தனை முறை ஏழைகளை எட்டி உதைத்து விட்டீர்கள்!

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிமுதல்வர் நயம் சொட்டச் சொன்னாரே—மேற்கு நோக்கிப் பயணம் செய்யும் மேதைகள் என்று!

ஆம்—அஸ்தமன காலம் உங்களை அன்போடு வரவேற்கின்றது!

ஆனால்—இந்த மாலை நேரத்து மயானப்பயணத்தை மறைக்க—

சம்பள உயர்வு கேட்டு வேலை நிறுத்தம் செய்த சாமான்யமக்களுக்கு அரசியல்சாயம் பூசி அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு வேடிக்கை கதை பேசுவதும்—

அடுத்த ஜனாதிபதியாக வரக்கூடியவர் அம்மையாரின் குடியியல் உரிமைகளுக்குக் கொள்ளி வைத்துவிட்டு—

கறைகளைக் கழுவ காவி உடைதரியுங்கள் என்று அவருக்குப்புத்திமதி சொல்வதுமாய்ப்பொழுதைக் கழிக்கின்றீர்கள்!

நீங்களென்ன, நீரோ மன்னனின் நிழல்களா?

இவைபோதாதென்று இன்னுமொருவழியில் ஏழைகளை எள்ளி நகையாடுகிறீர்கள்—

ஆம்—அதுதான் அரசு அறிவித்துள்ள எழுபது ரூபா சம்பளஉயர்வு!

நாடாளவந்தோரே! நாம் கேட்கவில்லை— நாடு கேட்கின்றது— இந்த எழுபது ரூபா எந்த மூலைக்கு?

பஸ்சில் பயணம் செய்யவே இந்தப் பணம் போதாதே—ஏழைகள் என்ன இளிச்ச வாயன்கள் என்ற எகத்தாளமோ?

நாட்டில் நீங்கள் காட்டும் வேடிக்கைகளெல்லாம் நகைச்சுவைமிக்கது எது தெரியுமா...? நிலையான அரசியல் இலங்கைத்தீவில் நிலவுகிறதென்ற நிதி மந்திரியின் பேச்சு!

தமிழீழத்தில் தடியாட்சிநடத்தும் நீங்கள்— தமிழ் இளைஞர்களைச் சுட்டுப் பொசுக்கிய நீங்கள் யாரை சிரிக்க வைக்க இப்படியெல்லாம் பேசுகின்றீர்கள்?

கடைசியாக—

திருமலை பா உ. திரு. இரா. சம்பந்தன் தெரிவித்த கருத்தையே உங்களுக்கு நினைவூட்டுகின்றோம்—

இரண்டு நாடுகளின்எதேச்சதிகாரியாகவிளங்கும் நீங்கள்—

ஏழை—எளிய மக்களிடமே அரசியல் சக்தி இருக்கின்றதென்பதை மறந்துவிட்டால் அது ஆபத்தையே வரவழைத்துவிடும்.

அதன் பிறகு—

ஒருசிலரிடம் மட்டுமே ஒட்டிக்கொண்டுள்ள பொருளாதார பலத்தால் ஒன்றும் செய்ய முடியாது.

இந்தவரிகளை உங்கள் இதயத்தில் இறுகப்பதித்துக் கொள்ள இருபதாம் நூற்றாண்டின் ஈரான் ஷாவும்— பதினெட்டாம் நூற்றாண்டின் 16ம் லூயிஸ் மன்னனும் பக்கத்தில் இருப்பார்களாக!

**ஆசிரியர் பேசுகிறார்**

# பட்ஜட்டைக் கண்டித்தால் பைத்தியக்காரனும்!

## யு. என். பி. எம். பி. துயரம்!

ஐக்கிய தேசியக் கட்சிஅரசாங்கத்தின் மூன்றாவது வரவு செலவுத் திட்டத்தின் குறைகளை எடுத்துச் சொன்னதால் முன்னாள் அமைச்சராகி விட்டதிரு.எம்.டி.எச். ஜயவர்த்தன அவர்கள் நான்காவது வரவு செலவுத் திட்டத்தையும்அண்மையில் நாடாளுமன்றத்தில் காரசாரமாகத் தாக்கிப்பேசினார். இதனால் அவர் யூ.என்.பியிலிருந்துவெளியேற்றப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

வரவு செலவுத் திட்ட விவாதத்தில்திரு-எம்.டி,எச்,ஜயவர்த்தன பேசுகையில்தெரிவித்ததாவது—

நான் இந்த பட்ஜட்டில் பேசுவதில்லை என்றே முதலில் நினைத்தேன் வார்த்தையை விட மௌனம் மேலானது. ஆனால் என்னைப்பற்றிப் பலவாறு பேசப்பட்டு இருப்பதால் எனதுவாதத்தைத் தெரிவிப்பதற்காகவே பேசுகிறேன்.

நான் என்னைப் பெருமளவு கட்டுப்படுத்திக் கொண்டே பேசுகிறேன் விமர்சனம் செய்வதைத் தவிர்த்துக் கொள்கிறேன்.

நான் ஐக்கியதேசியக் கட்சியில் 33 வருடங்கள் இருந்து வருகிறேன் கட்சியின்ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவன். ஆகவே நான் இங்கு பேசும் போது அரசாங்கத்தை தாழ்மைப்படுத்துவதற்காகவோ, கட்சியை வீழ்த்துவதற்காகவோ பேசுவதாக மாத்திரம் நினைக்க வேண்டாம்.

கடந்த வருடம் பட்ஜட்டைநான் விமர்சித்துப் பேசினேன், அப்போது என்னைச் சிலர் சனியன், கழுதை, பைத்தியம் என்று பேசினார்கள்.

அப்போது நான் போதையில் இருந்து பேசினேன் என்றும் சிலர் சொன்னார்கள், என்னைலண்டனுக்குச் சென்று வைத்திய சிகிச்சை செய்து கொள்ளுமாறுசிரேஷ்ட அமைச்சர் ஒருவர் செய்தி அனுப்பினார்.

நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் என்னைச் சந்தித்து பட்ஜட்டை விமர்சித்துப் பேசலாமா என்று என்னைக்கேட்டார் சபையில் முன்வரிசையில் இருப்பவர்கள் அத்தனை பேரும் முட்டாள்கள் என்று மக்கள் நினைத்துவிடக் கூடாது என்பதற்காகவே விமர்சித்துப் பேசினேன் என்று நான் அவரிடம் சொன்னேன் அவர் அதனை அமைச்சரவையில் தெரிவிக்க நான் ராஜினாமாச் செய்ய நேர்ந்தது,

கடந்த பட்ஜட் உரையில் நான் சொன்னவை எல்லாம் அவ்வாறே நிறைவேறி உள்ளன அந்த பட்ஜட் காரணமாக பின்னர் சபைக்கு பல மினி பட்ஜட்டுகளை கொண்டுவரநேரும் குறைநிரப்புப் பிரேரணைகள் சமர்ப்பிக்க நேரும் என்று நான் கூறினேன். அவ்வாறே இந்த ஆண்டில் நடைபெற்றும் இருக்கிறது.

1979ஆம் ஆண்டில் 350 கோடி ரூபாவுக்கு குறை நிரப்புப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன இந்த ஆண்டில் 2 கோடி ரூபாவுக்கு இதுவரை குறைநிரப்புப் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன உணவுத்திணைக்களத்துக்கு இன்னும் பாக்கியாக இருக்கும் பணத்தையும் செலுத்தும் போதுகுறைநிரப்புப்பிரேரணை மதிப்பீடுகள் 350 கோடி ரூபாவையும் தாண்டலாம்.

எமது விவசாயப் பொருளாதாரம் குன்றுகிறது என்று மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிக்கிறது.

நான் கடந்த பட்ஜட்டில் தெரிவித்தவற்றில் 75 சதவீதம் முதல் 80 சதமானவற்றை நிதியமைச்சர் அமுல்படுத்தி இருக்கிறார். ஆனால் அப்போது நான் வானொலியில் கேலிக்கு உள்ளாக்கப்பட்டேன்.

விமர்சனம் இல்லாத பட்ஜட் உப்பு இல்லாதகறிபோன்றதுகடந்தவருடத்திலல்லஅதற்கு முன்னைய வருடங்களிலேயேநான் பதவியில் இருந்து விலத்தப்பட்டிருக்க வேண்டும் ஏனெனில் நான் தொடர்ந்து பட்ஜட்டைவிமர்சனம்செய்து வந்திருக்கிறேன்,

உலகவங்கியின் சிபார்சுப் படியே இப்போது நெல்லின் உத்தரவாத விலை 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது இதோ உலகவங்கியின் அறிக்கை என்னிடம் இருக்கிறது உலக வங்கி சர்வதேச நாணயச்சபை என்பவற்றின் சொற்படி நீங்கள் நடப்பதில்லை என்று இன்னும் கூறி வருகிறீர்கள் 1981 மத்திய பகுதிக்கு முன்னர் நெல்லின் உத்தரவாத விலையை58முதல் 60 ரூபாவாக அதிகரிக்கவேண்

(5–ஆம் பக்கம் பார்க்க)

# ஒன்றுபடும் இனத்தை கொன்றுவிடும் துரோகம்!

## லண்டன் தமிழர் இணைப்புக் குழு உறுப்பினர் டாக்டர் சிறினிவாசன் கடிதம்!

”இலண்டனில் தமிழர் இணைப்புக்குழுவினால் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் தொடர்பாக மேற்கொண்டுள்ள தீர்மானத்தைத்தமிழர் விடுதலைக் கூட்டணியை விமர்சிக்கப்பயன்படுத்துவது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மட்டுமன்றி முழுத் தமிழ் தேசிய இனத்துக்கும் எதிராகச் செய்யப்படும் ஓர் பெருந்துரோகமாகும்.’, இவ்வாறு இலண்டன் தமிழர் இணைப்புக்கழகத்தின் சிரேஷ்ட அரசியல் பிரமுகர் டாக்டர் எஸ் ஸ்ரீநிவாசன்' தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருக்கு எழுதியகடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

1978ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு' அ அமிர்தலிங்கம் அவர்கள் இலண்டன் சென்றிருந்தபொழுது, இலங்கைத் தமிழர்களின் விவகாரங்களைக்கவனிப்பதற்காக நிறுவப்பெற்ற தமிழர் இணைப்புக்குழுவில் டாக்டர் ஸ்ரீநிவாசன் நியமிக்கப்பட்டிருந்தார். அண்மையில் இணைப்புக் குழுவைச் சேர்ந்த திரு.கி.வைகுந்தவாசன் வெளியிட்ட அறிக்கை குறித்து விசனம் தெரிவித்து எழுதியுள்ள கடிதத்திலேயே டாக்டர் ஸ்ரீநிவாசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்;

''அவர் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது; தமிழ் மக்களின் இனவிடுதலைப்போராட்டத்திலும், இலங்கைப் பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலான அலுவல்களில் மூழ்கி இருக்கும் உங்களுக்கு கடிதம் ஒன்றை எழுதுவதன்மூலம் சிரமம் தருவதற்கு வருந்துகின்றேன் ஆயினும், இலண்டன் தமிழர் இணைப்புக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்தமிழ்மக்களைப்பிளவுபடுத்தப் பாவிக்கப்படும் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகி இருப்பதனால் இக்கடிதத்தை எழுதுகிறேன்.''

''தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழ இனவிடுதலைப் போராட்டத்தின் சில கட்டங்களில் நேரடியாக இயங்க முடியாத நிலை ஏற்படினும் தமிழர் இணைப்புக்குழு சுதந்திரத் தமிழீழம் என்ற இலக்கை அடைவதற்கு தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கும் என்று பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒருமனதுடன் முடிவெடுத்ததை நீங்கள் அறிவீர்கள். இந்த அடிப்படையிலேயே மாவட்ட அபிவிருத்திச் சபைகளை நிராகரிக்க வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டபொழுது நானும் சேர்ந்துவாக்களித்தேன். ஆயின்இத்தீர்மானமானது தமிழர் விடுதலைக்கூட்டணியைக் கண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நிறைவேற்றப்பட்டதுஎன்பதை எவவகையிலும் என்னால் புரிந்துகொள்ளமுடியாதிருக்கின்றது உண்மையிலேயே அக்கட்டத்தில் 6 000 மைல்தூரத்துக்குஅப்பால்வாழ்ந்துகொண்டு மாவட்ட அபிவிருத்திச்சபைகளை ஆதரித்தமைக்காக தமிழர் விடுதலைக் கூட்டணியை கண்டிக்க கூடாதுஎன்பதை நான் நன்கு விளங்கப்படுத்தினேன் மிகப்பெரும்பாலான பொதுச்சபை உறுப்பினர்கள் இச்சட்டமூலத்துக்கு ஆதரவாக பாராளுமன்றக் குழு வாக்களிக்க வேண்டும் எனத் தீர்மானித்திருக்கின்றனர்; தகுந்த காரணமின்றி பொதுச்சபை உறுப்பினர்கள் அவ்வாறு செய்திருக்கமாட்டார்கள் என்பதையும் அக்கட்டத்தில் மேலும் எடுத்துக் கூறினேன்.''

இலண்டன் தமிழர் இணைப்புக்குழுவினால் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் தொடர்பாகமேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தை தமிழர் விடுதலைக் கூட்டணியை விமர்சிக்கப்பயன்படுத்துவது தமிழர் விடுதலைகூட்டணிக்கு மட்டுமன்றி முழுத் தமிழ் தேசிய இனத்துக்கும் எதிராகச் செய்யப்படும் ஓர் பெருந்துரோகமாகும்.

மாவட்ட அபிவிருத்திச்சபைகள் மசோதா இப்பொழுது சட்டமாகிவிட்டது, சுதந்திரத் தமிழீழத்தைக் குறிக்கோளாகக் வைத்து நீண்டகாலத்துக்குத் தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்கக்கூடியதாக இச்சட்டத்தில் உள்ள சரத்துக்களைப் பிரயோசனப்படுத்துவது தமிழீழத்திலும் அதற்கு வெளியிலும் வாழும்தேசாபிமானம் மிக்க ஒவ்வோர் தமிழனினதும் தலையாய கடமையாகும்

ஒருவரை மற்றவர் விமர்சிப்பதில் எங்கள் நேரத்தைவீணடிக்கக்கூடாது என்பதேஎனது தாழ்மையான அபிப்பிராயமாகும். அனைவரும் ஒன்றுபட்டு வேற்றுமைகளை மறந்து தமிழீழ இலட்சியம் என்ற புனித குறிக்கோளை அடைவதற்குப்பணியாற்றுவதேஎமது கடமையாக இருத்தல்வேண்டும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடையே போதிய ஒருமைப்பாடுஇன்மையேபிரச்சினைக்குக் காரணமாகும் அவர்கள் விசமத்தனமான வதந்திகளுக்குப்பலியாகிக்கொண்டிருக்கிறார்கள். இந்நிலைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு வேண்டி நிற்கின்றேன்.

---

### பட்ஜட்டைக் . . .

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்றும்உலக வங்கி கூறியிருக்கிறது.

தற்போது 15 ரூபாவுக்குக் கீழ் நாளாந்த சம்பளம் கொடுக்கும் ஆறு கைத் தொழில்கள் மாத்திரமே உள்ளன. எனது தென்னந் தோட்டத்தில் தேங்காய் பறிக்க ஆட்கள் தேவைப் படுகிறார்கள். இருபது ரூபாவுக்குக் குறைந்த கூலியில்யாரையேனும் அமர்த்த முடியுமானால் என்னிடம் சொல்லுங்கள் உடனே வேலை வழங்குகிறேன்.

நான் இந்த யோசனைகளை கடந்த பட்ஜட்டில் சொன்னபோது இவை அமுல் நடத்த முடியாதவைஎன்றீர்கள் இதற்காகநான்கேலி செய்யப்பட்டேன், இப்போது அவற்றையே அமுல் நடத்தவில்லையா?

நான் இங்கே மனம் உடைந்து பேசவில்லை. நான் யாருக்கும் சொந்தக்காரன் இல்லை. அதிர்ஷ்டவசமாகநான்இங்கே இருக்கிறேன்.

---

### தேர்வு நிலையம் மாற்றம்

1979ம் ஆண்டு முதற்கலைத் தேர் —முதல் விஞ்ஞானத் தேர்வுகள் கடந்த வருடங்களில் யாழ்ப்பாணத்திலேயே நடைபெற்றது. இதனால் யாழ்ப்பாணத்தோடு சேர்ந்த பிரதேசத்துவ தமிழ் மாணவர் சொந்த இடத்திலிருந்தே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாழ் — பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

ஆனால் மேற்படித்தேர்வுகள் பேராதனையில் 12-12-80 இல் இருந்து 24-12 80 வரைநடைபெறுமென பேராதனைப் பல்கலைக்கழகம் அறிவித்திருப்பது மாணவர்களுக்குப் பெரும்

(7-ஆம் பக்கம் பார்க்க)

---

## பேரறிஞர் நீட்சேயும் பெண்களும். . .

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு அங்குள்ள மாணவிகள் பேசுந்திறன் அற்றவர்கள் என்பதல்ல கருத்து துணிச்சல் இல்லை என்பதே பொருத்தமான காரணமாகும்.

இவ்வாறு பெண்கள் ஒன்றுக்கும் துணிச்சலில்லாது பதுங்கிக் கிடபபதற்குப் பல காரணங்களைக் கூறலாம். எமது சமூக் அமைப்பில்பெண்களுக்கு வழங்கப்பட்ட இடம் அல்லது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அல்லது பெண்பற்றிசமூகம் கொண்டிருக்கும் கருத்துக்கள் என்பன பெண்ணின் ஆளுமை வளர்ச்சியைத் தடுக்கும் காரணிகளாகின்றன. ஒரு பெண் தன் வாழ்வு முழுமையும் தந்தை, கணவன், மகன் என்போருக்கு அடங்கி வாழவேண்டும்என வற்புறுத்தப்படுகிறாள் சமூக விதிகள், வழிமுறைகள் என்பன எல்லாவற்றிலும் பெண்களுக் கொன்றாகவும், ஆண்களுக்கு வேறொன்றாகவும் இரட்டைத் தன்மையதாகக் காணப்படுகின்றன. உதாரணமாக பலாத்காரம் கற்பழிப்பு நடந்தால் குற்றம்சாட்டப்படுவது அல்லது அவமரியாதை அடைவது பெண்களே. சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவது கூட விபசாரத்தில் ஈடுபட்ட பெண்ணையே ஒழிய, ஆணை அல்ல.

பெண்ணாக வாழ்தல்என்பது வாழ்க்கை முழுதும் பயத்தோடு-ஒருவகைச் சிக்கலோடு (complex) வாழ்தலாகும். அவள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும், செய்யும் ஒவ்வொருசெயலும்பயத்தோடுப்பல தடவை யோசித்தே செய்யப்படவேண்டியுள்ளது இப்படி நடந்தால் பழிச்சொல்லுக்கு அவதூறுக்கு ஆளாகநேருமோ என யோசித்து தயங்கியே செய்ய வேண்டியிருக்கிறது. அவள் எவ்வளவு பெரிய பதவி வகித்தாலென்ன! இருண்டபின் வீட்டுக்குவெளியேஇருக்க அல்லது தனியாகப் பயணம் செய்ய அல்லது அறிவுரீதியாக வேனும் அந்நியன்ஒருவனுடன் கதைக்க அல்லது தேவை, தொழில், நட்பு நிமித்தம் வேற்று மனிதனுடன் பேசவோ, போகவோ கூட பயப்படவேண்டிய ஒரு நிலையில் பெண் வாழுகிறாள். அவள் தன் மனதில் எழும் சிந்தனைகளை போராட்டங்களை புரிந்து பகிர்ந்துகொள்ள அதை எண்ணி மகிழக்கூட அஞ்சுகிறாள். இதனால் வாழ்க்கையே பெருஞ் சுமையாய்ச் சோகமாய் மாறி விடுகிறது.

எமது சமூகத்தில் 'பெண்ணின் வாழ்க்கையின் ஒரே கடமையும் குறிக்கோளும் விவாகமாதலே என்ற கருத்து சிறு வயதிலிருந்தே ஊட்டப்படுகிறது. பெயர்கெட்டால் விவாகமாகாது போகுமோ, அதிகம் படித்தால் கூடிய சீதனம் கொடுத்து அதிகம்படித்த மாப்பிள்ளை தேடவேண்டி வருமோ என்ற அற்ப பயங்களே அவள் துணிந்து காரியமாற்றுவதற்குக் காரணமோ என ஐயுற வேண்டியுள்ளது. எவ்வளவு அதிகம் படித்த, கூடிய தகுதியுள்ள பெண்ணாயினும் வேறெந்த தகுதியுமில்லாது ‘ஆண்’என்ற ஒரே தகுதி மட்டுமுள்ளவனைத் திருமணம் செய்வதற்கு சீதனம்கொடுக்க வேண்டியுள்ளது.

ஒரு விதவை அல்லது கைவிடப்பட்ட பெண் அல்லது விவாகரத்து செய்த பெண்ணுக்கும் இதே நிலைகளிலுள்ள ஆணுக்கு கிடைக்கும்சமூகஅந்தஸ்தில்தான் எவவளவு வேறுபாடு; ஆணைவிட உயர்சம்பளம் பெறும் பெண்ணாயிருந்தாலும்' வேலைத்தலத்தால் வீடு திரும்பியதும் தொடர்ந்துவீட்டுவேலைகளைச் செய்ய அவள் தானே நிர்ப்பந்திக்கப்படுகிறாள். ஏன் சிறுபராயத்தில்கூட ஆண்பிள்ளைகள்சும்மா இருந்து விளையாட பெண்பிள்ளைகளோ தாய்க்குதவியாக வீட்டு வேலைகளிலீடுபடுமாறு வளர்க்கப்படுகிறார்கள். ஆண்பிள்ளைகளின் கல்வி, ஆளுமை விருத்தி இவைகட்கு எடுக்கப்படுமளவு சிரத்தை பெண்பிள்ளைகள் விஷயத்தில் காட்டப் படுவதில்லை.

சமவேலை செய்தாலும் சில துறைகளில் பெண்களின் ஊதியம் ஆண்களிலும் குறைவாக காணப்படுகிறது உதாரணம் பெருந்தோட்டத்துறை. ஏழ்மை. போசாக்கின்மை, பழமைபேணல்ல, மூடக் காள்கைகளை நம்புதல் போன்ற குறைகள் பெண்கள்மீதேசுமத்தப்படுகின்றன.

இவ்வாறு நீண்ட காலமாக பெண் அடக்கு முறைக்கு ஆளாகி நசுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு வருவதை தடுக்க என்ன செய்யலாம் என்ற கேள்வி எழுகிறது. அதற்கு முதலாவதாக எல்லாப் பெண்கள் மத்தியிலும் அவர்களது நிலை பற்றிய ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். பழைய மாயைக் கொள்கையில் மூழ்கிக் கிடக்கும் பெண்களைத் தட்டி எழுப்பி சமூகத்தில் அவர்களது அந்தஸ்து என்ன என்பதை விளக்கி' காலத்துக்கொவ்வாத செல்லரித்துப் போய்க்கொண்டிருக்கும் இந்த சமுதாயக் கருத்துகளை—அடிமை விலங்குகளை உடைத்தெறியவேண்டிய ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் அவர்கள் நிற்கிறார்கள் என்பதை உணர்த்தி அவர்களைப் போராடத் தூண்ட வேண்டும்.

தனித்தனியாகப்போராடுவதில் ஒருவிதமான பிரயோசனமுமில்லை. அப்போது கிடைக்கும் கசப்பான அனுபவங்கள் போராட்டம் என்ற சொல்லையே வெறுக்கச்செய்துவிடும். எல்லாரும் சேர்ந்து ஒற்றுமையாகப்போராடும்போது அது இலகுவாக இருக்கும் இதில் பெண்கள் அவ்வளவு சிரத்தை காட்டாது. பின் நிற்பதற்குக் காரணம். இதை அவர்கள் தனிப்பட்ட பிரச்சினை எனக் குறைத்துக் கவனித்ததே ஆகும். இது உண்மையில் சமூக பொருளாதார, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொதுப்பிரச்சினையாகும். ஒரு நாட்டு வளர்ச்சிக்குப் பெண் அளிக்கும் பங்கு கணிசமானது.

(7-ஆம் பக்கம் பார்க்க)

# பேரறிஞன் நீட்சேயும் பெண்களும்

**செல்வி - மைத்ரேயி சபாரத்தினம்**

பேராதனைப் பல்கலைக் கழகம்

"பெண்கள் வெறுமே இன்பம் தரும் சடப்பொருட்கள்'? என்ற கருத்தே நீட்சே எனும்மெய்யியலாளனின் பெண்கள் பற்றிய கருத்தின் அடிப்படை போல் தெரிகிறது. இக் கருத்தைக் கேட்கும்போதுபல பெண்களுக்கு-ஏன் சில ஆண்களுக்குக்கூட- ஆத்திரம் வரலாம். ஆனால் பெரும்பாலான ஆண்கள் இதைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்வர். காரணம் அவர்களது சுயநலம் பெண் வெறுமே சடப்பொருளாக இல்லாது ஒரு அறிவு ஜீவியாக— சிந்திப்பவளாக-தன் தகுதி அறிந்தவளாக மாறிவிட்டால் தங்களிலும் மேம்பட்டு விடுவாள். தாம் தவறிழைக்கும் போது தட்டிக் கேட்பாள்என்று வர்களுக்குள்ள பயம்இதனாலேயே காலம் காலமாக பெண்களை அடிமைகளாக்கி, அவர்களை முன்னேற விடாவண்ணம் சமூக அமைப்புகளையும், அவற்றின் விதிமுறைகளையும் உருவாக்கி வந்திருக்கிறார்கள். இதற்கு அவர்களது உடல்பலமும் பொருளாதார பலமும் உதவி புரிந்துவந்திருக்கின்றன.

இத்தகைய சமூக அமைப்பு முறை அண்மையில்தோன்றியதல்ல, கீழைத் தேயத்தில் மட்டும் காணப்பட்ட தொன்றுமல்ல. பழைய காலத்திலிருந்து ஆண் வெளிவேலைகளைச் செய்ய பெண் வீட்டுவேலைகளைச் செய்வதென்பது ஒருவித தொழிற் பிரிப்பாக அதாவது ஒவ்வொருவரும் செய்யவேண்டிஇருந்தவேலைகளைஎளிதாக்குமுகமாக கொண்டுவரப்பட்ட ஒரு வழக்கமாகவே இருந்தது பின்பு இத்தொழில்களில்சிறப்புத் தேர்ச்சிபெற்ற அவர்கள் தொடர்ந்தும் அத்தொழில்களையே செய்து வந்தனர். ஆனால் காலப்போக்கில் இந்நிலைமை சிறிதுசிறிதாகமாறத் தொடங்கியதால் தொழில் பிரிப்புச் செய்யப் பட்டிருந்த முறையும் மாறவேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆதிகாலங்களில் அதாவது நாகரிகம் அல்லாத அல்லதுஅவ்வளவுவளராதகாலகட்டங்களில் இத்தொழிற்பிரிப்பு முறையில் அதிகம் பிரச்சினைகள் எழவில்லை-ஆனால் நாகரிகம் வளர வளர அறிவு விருத்தியடையத்தொடங்கஇவ்வளர்ச்சியில் பங்கேற்பதுயார் என்ற பிரச்சினை எழுந்தது அப்போது வெளியில் சென்று உழைத்து அதனால் கூடிய தன்னம்பிக்கையும், பரந்த அறிவும் பலமும் பெற்றிருந்த ஆண்வர்க்கம் தன்னியக்கமாகவே (automatic) இதில் பங்கேற்று முன்னணியில் திகழ்ந்தது. ஆனால் அதேவேளை, தொழிற்பிரிப்பின் காரணமாகவீட்டுத் துறையைப்பொறுப்பேற்று, அவ்வளவு காலமும் உள்முடங்கிக் கிடந்ததால் சுயநம்பிக்கையும், பொது அறிவும், அனுபவ ஞானமும் குறைந்திருந்த பெண்வர்க்கம் வெளியுலகம் விரிந்து பரந்து செல்வதை உணராது கிணற்றுத் தவளைகளாக வாழத்தலைப்பட்டது. இதற்கு விதி விலக்காக ஒரு ஔவையோ அல்லது ஒரு மேரிக்கியூரியோ இருந்தாலும் பெரும்பான்மையான பெண்கள் இனப்பெருக்கத்தைத் தவிர வேறெந்த ஆக்கபூர்வமான செயலிலும் ஈடுபடவில்லை. அவர்களை இந்நிலையிலிருந்து மீட்பதற்கு அப்போது முன்னேறியிருந்த ஆண் வர்க்கம் தனது சுயலாபம் கருதி எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை.

ஆனால் காலம் செல்லச் செல்ல ஆண்கள் தொழிற்பிரிப்பில் தமக்களிக்கப்பட்ட வேலையை, அதாவது, உழைத்து வீட்டைக்காத்தல், என்ற பணியைச் செய்யாது வழுவத்தொடங்கியபோது - கூட்டுக் குடும்ப முறை (joint family system) கூட இல்லாதொழிந்த போது பெண்வீட்டை விட்டு வெளிவந்து உழைத்துக் குடும்பத்தைக் காக்கவேண்டிய நிலைக்காளானாள்.

இவ்வாறுஅவளது வெளியுலகத் தொடர்பு வளர்ச்சியடைந்த போது அதில் ஏற்பட்டிருந்த மாற்றம், முன்னேற்றம் போன்றவற்றை அவள் அறியத் தொடங்கிய போது—சமூக நாகரிக வளர்ச்சி மேலும் ஏற்படுவதற்கு தானும் ஏதாவது பங்களிப்பைச் செய்யவேண்டும் என்ற ஆசை, உந்துதல் அவளுக்கு ஏற்பட்டது.

சமூக மாறுதல்கள் ஏற்படத் தொடங்கியதால் கல்வியறிவு, வெளியுலகு பற்றிய அறிவு கிடைக்கப்பெற்று அறிவு பூர்வமாக சிந்திக்கத் தொடங்கிய பெண்கள். சமுதாயவளர்ச்சிப் படிமுறையில் தாம் எவ்வளவோ பின்னிற்பதைக் கண்டனர். இவ் இடைவெளியை நிரப்ப அவர்கள் முயன்ற போது, இதுவரை காலமும் அதாவது சமூக மாறுதல்களுக்கு முன்பிருந்த சமூக விதிமுறைகள் அவர்களைத் தடுத்த போது அவர்கள் செய்வதறியாது திகைத்தனர். சிலர் இதை எதிர்த்துப்போராடவும் துணிந்தனர்.

ஆனால் இப்புரட்சி மனப்போக்கு எல்லாப் பெண்களிடமும் ஏற்படவில்லை. காலம் காலமாக அடிமைப்பட்டு, முதுகெலும் பற்றவர்களாக வாழ்ந்து பழகிவிட்டதனால் இதுதான் நியதி இதுதான் இயற்கை என்றெண்ணி, தாம் அடிமைப் பட்டிருக்கிறோம் சமுதாய வீதியில் நடத்தும் பிரயாணத்தில் எவ்வளவோ பின்நிற்கிறோம் என்ற பிரக்ஞையே இன்றி பெரும்பாலான பெண்கள் வாழ்கிறார்கள். பெண்களை அடக்குவதை நோக்கமாகக் கொண்ட ஆண்களோடு தனிப்பட்ட முறையில் தம்மை நன்கு இணைத்துள்ள பெண்கள் காதல், நிலையான வாழ்க்கை என்பவற்றுக்காக ஆண்களின் தேவைகள், விருப்புகளுக்கேற்ற வகையில் தம்மை மாற்றி வாழக் கூடுதலாக முயற்சி செய்கிறார்கள். அவ்வாறன்றி ஏதாவது துணிச்சலாக காரியமாற்றும் பெண்களை ஏனையோர் குறைகூறுகின்றனர். இத்தகையபெண்களும் பெண்கள் முன்னேற்றத்தை விரும்பாத ஆண்களுமாகச் சேர்ந்து பழைய விதிகளிலிருந்து விடுதலை பெறத் துடிக்கும் பெண்களின் வேகத்தை அடக்கி அவர்களைப் போராட விடாது தடுக்கிறார்கள்.

இப்பண்பு பெரும்பாலும் முதலாளித்துவ நாடுகளிலும் வளர்ச்சியடையாத. வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகளிலுமே காணப்படுகிறது சோசலிஸ நாடுகளில் சமூகத்தில் பெண்களின் பங்களிப்பு ஆண்களுக்கு எவ்விதத்திலும் குறைந்ததாக இல்லை 'மாதர் பூரண விடுதலையை வென்று பெறாத வரையிலும் தொழிலாளவர்க்கம் பூரணவிடுதலையை அடைய முடியாது என்று லெனினும் தன் மனைவியை அடிக்கும் ஒருவனை சாகும்வரை சவுக்கால் அடித்தால்கூட மார்க்ஸ் ரசித்திருப்பார் என்று கார்ல் மார்க்ஸின் நினைவுக்குறிப்பில் வில்கெம் லீப்ளெக்டும் கூறியதிலிருந்து பெண் விடுதலை சமத்துவம் என்பன பொருளாதார அமைப்பு ரீதியான மாற்றத்தோடு தொடர்புடையதா என்ற கேள்வியும் எழுகின்றது.

நீட்சே போன்றோரின் கருத்தைப்பெண்கள் ஏற்றுக்கொள்ளுவது பெண் வர்க்கத்தையே அவமானப் படுத்துவதற்குச் சமனாகும். எந்த ஒரு உண்மையான தன்மானமும் சுயகௌரவமும் உள்ள— பெண்ணும் இதை ஒப்புக்கொள்ள மாட்டாள். அதுவும் உயிரும், உணர்ச்சியும் அறிவுமுள்ள ஒரு ஜீவியைப் பார்த்து வெறுமே இருப்பதற்கு இடமும் நிறையும் மட்டுமே கொண்டுள்ள ஜீவனில்லாத ஒரு ஜடப்பொருள் என்று கூறினால் எந்த மானமுள்ள ஒரு ஜீவியும் பொறுத்துக்கொள்ள மாட்டாள்.

ஆனால்............! அவளைப் பார்த்து,

''சரி, நீ வெறும் இன்பம் தரும் சடப்பொருள் அல்ல என்றால் நீ ஆக்க பூர்வமாக எதையாவது சாதித்திருக்கிறாயா? அல்லது ஒரு அறிவுஜீவியாக வாழ்ந்திருக்கிறாயா? துணிச்சலுடன் முன்சென்று எதையாவது தலைமைதாங்கி நடத்தும் தைரியம், ஆற்றலைப் பெற்றுள்ளாயா?'' என்று கேட்டால் பெரும்பாலான பெண்களின் பதில் மௌனம் தான்.

,ஏன் இந்திரா காந்தி இல்லையா? திருமதி தாட்ச்சர் இல்லையா?என்று சிலர் கேட்கலாம் இன்னும் சிலர் கேட்கலாம்·

,,எல்லா ஆண்களும் ஏதோ பெரிசா சாதிக்கிறார்களா? இல்லையே! யாரோ சிலர் சாதனை செய்ய, பெயரமட்டும் பொதுவாக ஆண்கள் என்று தட்டிச் செல்லுகிறார்களே, என்று.

உண்மைதான்! ஆனால், ஆண்கள் செய்திருக்கும் சாதனைகளுக்கு அல்லது புதிய கண்டுபிடிப்புகளுக்கும் சமனாக பெண்கள் செய்திருக்கிறார்களா, ஆகக் குறைந்தது கால்வாசியாவது...? இதற்கு ''இல்லை'' என்று தான் வருத்தத்துடன் கூற வேண்டியுள்ளது. அறிவியல் விஞ்ஞானத்துறையாகட்டும், பொதுஜனத் தொடர்புக் கலைத்துறையாகட்டும். கடினமான உடலுழைப்பு முயற்சியாகட்டும் எத்தனை பெண்கள் இவற்றில் சாதனை புரிந்திருக்கின்றனர். ஆண்களோடு ஒப்பிடும்போது விரல்விட்டு எண்ணி விடலாம்.

உதாரணத்துக்கு எடுப்பின் ஒரு விவாதம் அல்லது கலந்துரையாடல்நடைபெறும் போது அதைப் பார்க்க வந்திருக்கும் பெண்கள் எவ்வளவு? அதில் எழுந்து சபையோர் கருத்தோ அல்லது ஏதேனும் சந்தேகங்கள், கேள்விகள், விமர்சனங்களோ செய்யும் பெண்கள் எவ்வளவு? ஆண்களோடு ஒப்பிடுகையில் ஒரு மிகச் சிறு வீதம். நான் அவதானித்தவரையில் மாணவ மட்டங்களில்(பெண்கள் பாடசாலை தவிர்ந்த பாடசாலைகள், பல்கலைக் கழகங்களில்) பெண்கள் இப்படியானபொதுநிகழ்ச்சிகளில் பங்குபற்றுவது குறைவாகவே காணப்படுகிறது.

உதாரணததுக்கு பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கம் இவ்வாண்டு நடத்தியபேச்சுப்போட்டியைக் கூறலாம். ஒரு பெண்கூட எழுந்து பேச முன்வராததால் பெண்களுக்கானபரிசுவீணே விடப்பட்டது

—5'ஆம் பக்கம் பார்க்க

## பத்திரிகைப் பெண்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பத்திரிகைகள் பற்றிச் சொல்லும்போது 'காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான், பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே!' என்று சொன்னார்.

பத்திரிகை ஆணே! என்று சொல்லவில்லை.

பெண்ணுக்குரிய அச்சம்—நாணம்—மடம்—பயிர்ப்பு இத்தனை குணங்களும் ஒரு பத்திரிகைக்கு இருந்திட வேண்டும் என்பதை அறிவுறுத்தத்தான்பாவேந்தர்பாரதிதாசன் பத்திரிகையைப் பெண்ணுக்கு ஒப்பிட்டு 'பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே'என்று குறிப்பிட்டார்.

— கலைஞர் மு. கருணாநிதி

(ஆனந்தவிகடன் பொன் விழா நிகழ்ச்சியில்)

# மக்கள் சக்தியை மதிப்போம்

# புரட்சி இயக்கத்தை வளர்ப்போம்

- மாவை சேனாதிராசா

## சமதர்ம தமிழீழத்திற்கே எம் உயிர் என்பது உறுதி



"தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் ஈழத்தின் அரசியல்—விஞ்ஞான சமதர்ம அடிப்படையில்சமூக, பொருளாதார விடுதலையையும் இலட்சியமாகக்கொண் டே போராடிவருகிறது. த. வி. கூட்டணி தனியே வர்க்க விடுதலையை மட்டும் அடிப்படையாகக் கொண்ட இயக்கமல்ல. வர்க்க விடுதலை தவிர்க்கமுடியாதது ஆனால் அந்த விடுதலைப் புரட்சியைதிணித்துவிடலாமென்பது அர்த்தமற்றது."

இப்படி— சாவகச்சேரியில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் மாவை சேனாதிராசா அவர்கள் குறிப்பிட்டார்.

டொனமூர் ஆணைக்குழுவின் அரசியல் திட்டத்தை எதிர்த்துப் பேசும் பொழுது. "டொனமூர் என்றால் தமிழர் இல்லை என்று எச்சரித்தார் சேர் பொன் இராமநாதன்.

அன்று பொது எதிரி வெள்ளைக்கார ஏகாதிபத்தியம் அவனை நாட்டை விட்டு வெளியேற்றச் சிங்களவரும் தமிழரும் எதிர்த்துப் போராடினர். அப்போராட்டத்தினை முன்னின்று நடத்தியவர்களுள் இராமநாதனவர்கள் முக்கியமானவர்.

அவரும் அவர் தம்பி அருணாசலம் அவர்களும் தமிழினத்தின் பாதுகாப்புப் பற்றி அன்றே அச்சம் தெரிவித்தனர்.

ஆனால் தமிழினத்தின் உரிமைக்குரலை எழுப்பியவர்கள் அன்று தமிழ் ஈழத்தின் விடுதலையைக் கோரவில்லை.

அதற்குப்பின் அமரர் ஜி ஜி தலைமையில் தமிழ்க் காங்கிரஸ் ஐம்பதுக் கைம்பது கோரிக்கையை முன்வைத்தது. சுயநிர்ணய உரிமையடிப்படையில் தமிழினத்தின் உரிமைக்குரலை எழுப்பினர் அமரர் ஜி ஜி.

அதற்குப்பிறகு தந்தைசெல்வா தலைமையில் தமிழரசுகட்சி தமிழ் மாநிலத்தில் தமிழரசும் மத்தியில் இணைப்பரசும்என்று இலட்சியப் போரைக் தொடக்கினார்.

அன்றிலிருந்து தமிழ் மக்கள் தந்தை தலைமையில் மக்கள் இயக்கங்களைப் போராட்டங்களை நடாத்தி வந்தனர்.

அவ்விடைக் காலத்தில்தான் அன்று அமைச்சரவையில் சேர்ந்து தமிழினத்திற்குத்துரோகமிழைத்துவிட் டேனென்று ஆட்சி மன்றத்தில் 1956ல் கண்ணீர் விட்ட திரு. சுந்தரலிங்கம் அவர்கள் தமிழ் நாடு தமிழனுக்குத் தேவை என்று சொன்னார்.

அதனை அன்று ஏனைய தலைவர்களோ மக்களோ மதிக்கவில்லை.

1956ம் ஆண்டு ஆனி 5ம் நாள் ஆட்சி மன்றத்தில் கொண்டு வரப்பட்ட தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்துப் பேசிய டாக்டர் கொல்வின் ஆர் டி. சில்வா "ஒருமொழி என்றால் இருநாடு" இருமொழியென்றால் ஒரு நாடு' என்று பேசினார்.

- தொடரும்

---

## திருமண அழைப்பிதழ்

உ

அன்புடையீர்,

நிகழும் ரௌத்திரி வருடம் கார்த்திகை மாதம் 7-ம் தேதி (22-11-80) சனிக்கிழமை காலை 11 மணி முதல் 12 மணிக்குள்ளாகவரும் சுப முகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எங்கள் புத்திரன் திருநிறை செல்வன் | எங்கள் புத்திரி திருநிறை செல்வி |
| க. சோதிநாதன் | சி. புஸ்பராணி |
| (ஸ்ரீ வாணி உரிமையாளர்) திருநெல்வேலிச் சந்தி அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் நலத்தினால் திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால்அத்தருணம் தாங்கள் இஷ்டமித்திர குடும்ப சமேதரர்களாக சமூகமளித்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| சி. கணபதிப்பிள்ளையும் | க. சிவரத்தினமும் |
| பாரியாரும் | பாரியாரும் |
| தாய்மனை | [விநாயகா ஸ்ரோர்ஸ் |
| திருநெல்வேலி கிழக்கு | புத்தளம் |
| யாழ்ப்பாணம் | கோண்டாவில் கிழக்கு |
| | கோண்டாவில் |

குறிப்பு:— தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை.

---

## தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நன்றியும்-பாராட்டும்

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவினதும் —திரு. பீலிக்ஸ்டயஸ்பண்டாரநாயக்காவினதும் குடியியல் உரிமைகளைப் பறிப்பதற்கும்—திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவதற்குமான அரசாங்கத்தின் இரண்டு தீர்மானங்கள் அக்டோபர் மாதம் 16ம் திகதி நாடாளுமன்றத்தில் கொண் வரப்பட்ட போது அவற்றை எதிர்ப்பதில் ஒத்துழைப்பும் ஆதரவும் வழங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுவிற்கு சிறிலங்க சுதந்திரக் கட்சியின் அதி உயர் அதிகார பீடம் (POLIBUREAU)தனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்திருக்கின்றது!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவும் தனிப்பட்ட முறையில் தனது நன்றியினைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைப்பீடத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

---

## அமரர் திருச்செல்வம் நினைவாஞ்சலி தினம்

தமிழ் இனத்தின் தன்மானத் தலைவர் அமரர் திருச்செல்வத்தின் நான்காவது ஆண்டு நினைவாஞ்சலி தினம் எதிர் வரும் 23-11-80 இல் யாழ்- வீர சிங்கம் மண்டபத்தில் மாலை 6மணிக்கு அனுட்டிக்கப்படும்.

யாழ். பா.உ திரு வெ. யோகேஸ்வரன் தலைமை தாங்கும் மேற்படி வைபவத்தில் கலந்து கொண்டு தமிழர் தலைவர் அமிர், இயக்கத்தலைவர் திரு. சிவா, கலாநிதி. க. வித்தியானந்தன், யாழ், மேயர்-திரு. விஸ்வநாதன் ஆகியோர் கலந்து கொண்டு இறப்புரை ஆற்றுவர்.

ஈழத்துப் புலவர் சிவானந்தன்இரங்கல் கவிதை படிப்பார்.

இந் நிகழ்ச்சி அமரர். திருச்செல்வம் பொதுப்பணி மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



---

## தேர்வுநிலையம்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிர்ச்சியைத் தந்துள்ளது.

ஜனாதிபதியின் ஆணைக்குட்பட்ட உயர் கல்வி அமைச்சின் இச் செயல் குறித்து பாதிக்கப்பட்ட மாணவர்கள் எதிர்க்கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம்அவர்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

---

## பேரறிஞர் நீட்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் சட்டங்களில் பெண்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சமத்துவப் கூட வெறும் ஏட்டளவிலே உள்ளது. கிடைத்த சில உரிமைகளும் கூட மத்தியதர, உயர்மத்தியதர வர்க்கத்துக்கே பயன்படுகின்றன. இவ்விசம் கிடைத்த சில உரிமைகள் பெண்கள் பற்றிய தாக்கத்தைப் பின்போடுகின்றன

இதை இவ்வாறு பின்போடாது விழித்தெழுந்த பெண்களாவது தூங்கும் பெண்களை தட்டியெழுப்பும் மகத்தான பணியிலிறங்க வேண்டும்

(நன்றி —'புதுசு')

# சரித்திரம் திரும்புகிறது!

## தலைவர் சிவசிதம்பரம் எச்சரிக்கை!



தமிழினம் வாழ தம்மால் ஆனவரை தளராது உழைத்த தமிழ்த் தொண்டர்களான அமரர்கள் கு. வன்னியசிங்கம், மு.திருச்செல்வம்,சேவியர் தனிநாயகம்,அடிகளாரின் இனிய நினைவின் இதயத்தில் நிறுத்தும் வண்ணம் தெல்லிப்பழை யூனியன் மண்டபத்தில் சீரும் சிறப்புமாக நடை பெற்ற கூட்டத்தில் தலைவர் சிவா கலந்து கொண்டு பேசினர்.

அவர் பேசுகையில்கூறியதாவது —

தந்தை செல்வா, வன்னியசிங்கம்,திருச்செல்வம் அமிர்தலிங்கம் போன்றவர்கள் ஒரு பாசறையில் இருந்து வளர்ந்தவர்கள். நான் எதிர்ப் பாசறையிலே வளர்ந்தவன் அந்தக்காலத்தில் நாங்கள் போட்டிபோட்டுக்கொண்டுஒருவரையொருவர் திட்டித்தீர்த்தோம் டட்லி ஆட்சியில் எங்கள் இரு கட்சிகளுமே இணைந்திருந்தும்கூட நாம் சாதித்தது எதுவுமே இல்லை தமிழரசுக்கட்சி திருமலையில் பல்கலைக்கழகம் வேண்டுமென்று கேட்டது நாங்கள் யாழ்ப்பாணத்தில் வேண்டுமென்று கேட்டோம். அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகம் கேட்டார்கள். நாங்கள் இந்துப் பல்கலைக்கழகம் என்றோம். டட்லி நடுவில் இருந்து சிரித்துக் கொண்டிருந்தார். ஒன்றுமே வரவில்லை.

மாவட்ட சபை மசோதா வந்தது அங்கும் எதிர்ப்பும் போட்டியும் எங்களுக்குள்ளே தான், திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டதுபோல 6 மாதங்களாக டட்லி வீட்டில் ஜீ.ஜீ.க்கும் திருச்செல்வத்துக்கும் வாக்குவாதம். இந்த இழுபறியில் சிங்கள மக்கள்எதிர்ப்புக் கிளம்பவே அதுவும் இல்லாமல் போனது. இவ்வாறே பண்டா செல்வா ஒப்பந்தம் உருவாகிய வேளையில் நாங்கள் பிரிந்திருந்த காரணத்தினல் தமிழினத்தைக் காட்டிக்கொடுத்துவிட்டது தமிழரசுக் கட்சி என்று நாங்கள் கூறினோம். இதற்குப் பதிலளித்த தமிழரசுகட்சி இது முதல்படி என்றார்கள் சிங்களப்பத்திரிகைகள் இதை சிங்கள மக்களுக்கு முதல் அடி என்று பிரசாரம் செய்தது சிங்களஅரசியல்வாதிகளும் பத்திரிகைகளும் இலங்கைப்படம் போட்டு தமிழ்ப்பகுதிகளைப் பிரித்துக்காட்டி பண்டா—செல்வா ஒப்பந்தத்தோடு பிரிவதற்கு காரணமாகின்றன என்று பிரசாரம் செய்தார்கள். ஆபத்து வந்தது சிங்கள மக்கள் கிளர்ச்சி செய்தார்கள். பலன் அதுவும் இல்லாமல் போனது.

இவ்வாறு தமிழினம் காலம் காலமாக தங்களுக்கிடையே உள்ள ஒற்றுமைக் குறையினலும் வேறுபாடுகளினலும் போட்டி போட்டுக் கொண்டு கிடைக்கக்கூடிய சலுகைகளை நாம் [illegible] சாதிக்கவும் உரிமைகளையும் இழந்து வந்திருக்கின்றது இந்த சரித்திரம் திரும்பவரக்கூடாது. எம்மிடையே அனவசியமான பிரிவுகளும் வேறுபாடுகளும் எங்களுக்குப் பெலவீனத்தை எற்படுத்துமே தவிர எவ்வித பயனையும் தராது. 77ல்ட்ரயல் அட் பார் நீதிமன்றத்தோடு முழுமையாக தலைவர்களிடையேஏற்பட்டஒற்றுமையை மேலும் மேலும் பலப்படுத்த வேண்டிய சூழ்நிலையில் வேறு சிலர்குலைக்கப்பார்க்கிறார்கள்.

நாம் சிலவற்றை வெளிப்படையாக்க் கூறுவதன்மூலம் பாதிப்புகள் எற்படும்.மாவட்ட அபிவிருத்திச்சபைகள் மூலம் லாம்என்றுநம்புகிறோம். இதன் மூலம் எங்கள் பாரம்பரியபூமியைக்காக்க முடியாது விட்டால் எந்தநிமிடமும் அதனைத் தூக்கி எறியத்தயங்கமாட்டோம். நாம் கடந்தகாலங்களில் படித்த படிப்பினைகளைக் கொண்டு முன்னர் நான் குறிப்பிட்டதுபோல சரித்திரம் திரும்ப நடக்க இடம் கொடுக்கக் கூடாது. தமிழினத்தின் வாழ்வோ தாழ்வோ எழுச்சியோ வீழ்ச்சியோ இந்த சரித்திரம் திருப்புவதிலேதான் தங்கியுள்ளது. தமிழினத்தின் ஒற்றுமையைக் குலைக்க முற்படுபவர்கள் இதனைப் புரிந்து கொள்வார்களேயானல் எல்லாம் சரியாக நடக்கும்.'

## அநியாய ஆட்சி ...

(—1ஆம்- பக்கத் தொடர்ச்சி)

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.மு. சிவசிதம்பரம் அவர்களின் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் தமிழர் தலைவர் அமிர், சிறிலங்கா சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி சிறிமவோபண்டாரநாயக்கா கொல்வின் ஆர். டி. சில்வா, உட்பட பல அரசியற்பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற விருக்கின்றனர்,

இக்கூட்டம் சிறிலங்கா—தமிழீழ அரசியலில் பெரும் எழுச்சியை உருவாக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எங்களிடம் எல்லாவிதமான பலசரக்குச் சாமான்கள் விற்பனைக்குண்டு
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

திருமுருகன்

களஞ்சியம்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

றொமின், ஹறிலிஸ்ற் நீர் இறைக்கும்
இயந்திரங்கள், உதிரிப் பாகங்களின்
ஏகவிற்பனையாளர்கள்

துர்க்கா ஓட்டோ காட்வெயர்ஸ்

11, ஸ்ரான்லிறேட்
யாழ்ப்பாணம்.

## தனிநாயகம் அடிகள் நினைவாஞ்சலிக் கூட்டம்

தமிழ்ப் பேரறிஞர் தனிநாயகம் அடிகளாரின் நினைவாஞ்சலிக்கூட்டம் அண்மையில்மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் மிகச்சிறப்போடு நடைபெற்றது.

மாணவமணிகளின் மாபெரும் ஊர்வலத்தோடு ஆரம்பமான இந்தப் புனிதமான நிகழ்வுக்கூட்டம் சிவானந்தா வித்தியாலயத்தின் முன்னாள்அதிபர் திரு.க. கணபதிப்பிள்ளை அவர்களின் தலைமையில் ஆரம்பமானது. கூட்டத்தில் வித்துவான் எவ்.எக்.சி. நடராசா வித்துவான்சா.இ.கமலநாதன் ஜனாப் மகறூப் கரீம், அருட்திரு ஜோசப்மேரி அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

கவிஞர் திமிலைத்துமிலன் அன்ரனி ஆசிரியரின் கவிதாஞ்சலியும் மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை மாணவர்களும் அரசடி மகாவித்தியாலய மாணவமணிகளும் பாடிய பாமாலையும் நிகழ்வினைப் பெரிதும் அலங்கரித்தன.

இது தொடர்பான ஒழுங்குகளைச் செய்த நினைவுக்குழுவின் சார்பாக முன்னின்று செய்த திரு. அன்புமணி அவர்கள் பெரிதும்பாராட்டுக்குரியவராகும்.

சாந்தி (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, 4-45, 7-00, 9-45.
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

THE WIL BY CONSPIRACY
(Colour) (ஆங்கிலம்)

விரைவில் எதிர்பாருங்கள்!

எஸ். பி. வீரப்பா அளிக்கும்

திசை மாறிய பறவைகள்!

(வண்ணச் சித்திரம்)

ராஜா (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, மாலை 6-30 9-30

75 - வது நாளைநோக்கி
வெற்றி நடை போடுகிறன்......

ஜெய்சங்கர், ஜெயசித்ரா, ரோஜாரமணி,
அசோகன், எம் ஆர் ராதா, எஸ். பி. சுப்பையா,
பண்டரிபாய் நடித்த

அறிஞர் அண்ணாவின்

வண்டிக்காரன் மகன்

(ஈஸ்ட்மன் கலர்)

திரைக் கதை வசனம் கலைஞர் — மு. கருணாநிதி

உதய சூரியன் வெளியீட்டகத்தால் நல்லூர் சண்முகா பதிப்பகத்தில் 21-11-80 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.